**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**<u>O.S.No. 1253/2022</u>**

**வா.சா.1. ராஜன்** 02.06.2023

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பிரதிவாதியை எனது பக்கத்து ஊர் என்பதால் தெரியும் . நான் வட்டிக்கு நிறைய நபர்களுக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை , இந்த ஒரு கடனுக்குத்தான் கொடுத்துள்ளேன். நான் நிறைய நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன். நான் கடன் பெற்றதை திரும்பி செலுத்தாமல் எனக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான், எனது சொத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் கார் , வீட்டு கடன்கள் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதை திருப்பி செலுத்திவிட்டேன் . மேற்படி ஸ்ரீராம் பைனான்ஸ்–இல் பெற்ற கடன்களுக்கு இந்த பிரதிவாதிதான் எனக்கு ஜாமீன் கையெபத்து செய்திருந்தார் என்றால் சரிதான் . அந்த பணத்தை நான் கட்டாததால் எனக்கு எதிராகவும், இந்த பிரதிவாதிக்கு எதிராகவும் திண்டுக்கல் இசைவு தீர்ப்பாயத்தின் மூலம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரிதான் , அந்த கடனை திருப்பி செலுத்திவிட்டேன் . தாவா கடனை எனது வீட்டில் வைத்து பிரதிவாதி வாங்கினார் . கடன் பிரதிவாதி பெற்றபோது யாரும் உடன் வரவில்லை. கடன் பிரதிவாதி என்னிடம் புரோநோட்டு எழுதிக்கொடுத்த ஒரு வாரத்திற்கு முன்பு தோட்டம் கிரையம் செய்வதற்காக பணம் தேவைப்படுவதாக கேட்டார், நான் ஒரு வாரம் கழித்து வருமாறு சொன்னேன் , புரோநோட்டு எபதிக்கொடுத்த முதல் நாள் அன்று 6 லட்ச ரூபாய் என்னிடம் பெற்றுச்சென்றார். மறுநாள் 30.06.2019 அன்று மணிவண்ணன் என்பவரை அழைத்து வந்து தாவா புரோநோட்டை எனது பெயருக்கு எழுதிக்கொடுத்தார் . மேற்படி விபரத்தை எனது வழக்கிலும் , நான் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . என்னிடம் கடன் பெற்று சென்றுதான் பிரதிவாதி அந்த தேதியில் கிரையம் பெற்றார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது , ஆனால் அதற்காகத்தான் என்னிடம் கிரையம் பெற்றார்.

**(பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.06.05 10:46:05 +0530

**சார்பு நீதிபதி,**

**ஒட்டன்சத்திரம்.**